செய்கிறார்கள். சந்தா வசூல் செய்வதிலே, எந்தத் தொழிற்சங்கத்திற்கும் நாங்கள் இடையூறாக இல்லை. குறிப்பாக, இன்னும் சொல்லப்போனால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின் பேரில், நிர்வாகமே அந்தச் சந்தாவை வசூல் செய்து உங்களுக்குத் தந்து கொண்டிருக்கிறது. அதுதான் இப்போதும் நடைமுறையில் இருக்கிறது. அதிலே நாங்கள் யாரும் குறுக்கிடவில்லை. அதைப் பெற்றுக்கொண்டுதான் இருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: அடுத்து, பள்ளிக்கூடங்களைப் பொறுத்தளவிலே, இன்றைக்கு இருக்கிற நிலைமை என்னவென்றால், நம்முடைய பள்ளிக்கூடங்களைப் பொறுத்தளவிலே, social control என்பது, அதாவது அரசினுடைய admission policy–ஆனாலும் சரி, fees structure--ஆனாலும் சரி, சில contents of the syllabus-ஆனாலும் சரி, இந்த மூன்றும் இன்றைக்கு அரசினுடைய control–லிலே கிடையாது. இன்றைக்குத் தனியார்களுடைய சொத்தாக இது மாற்றப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜே. ஹேமச்சந்திரன், எஞ்சிய பேச்சை நாளைக்குத் தொடரலாம். நாளைக்குத் தொடருங்கள்.

9. அரசினர் தீர்மானம்

விதி 32–ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை *(28–09–2005)* அன்று வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி *32*–ஐ *28–09–2005* அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை *(28–09–2005)* வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(28–09–2005)* காலை *10–00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–43 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

30. *2002–2003* ஆம் ஆண்டிற்கான தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் இருபத்தி எட்டாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் *(மத்திய சட்டம் 1/1956) 619*–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] *(தமிழ், ஆங்கிலம்)*

31. *2003–2004* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தணிக்கை அறிக்கை. [*1970* ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியச் சட்டத்தின் *(தமிழ்நாடு சட்டம் 4/1971) 47 (2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] *(தமிழ்)*

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

30. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்தி எட்டாவது அறிக்கை. *(2003–2006)*

31. மனுக்கள் குழுவின் நூற்றி இருபத்தி மூன்றாவது அறிக்கை. *(2003–2006)*

32. மனுக்கள் குழுவின் நூற்றி இருபத்தி நான்காவது அறிக்கை. *(2003–2006)*

33. மனுக்கள் குழுவின் நூற்றி இருபத்தி ஐந்தாவது அறிக்கை. *(2003–2006)*

❖❖❖❖❖